1992 மார்ச் 30]

386—

## இரும்புப் பாலங்களை ஏலம் விட நடவடிக்கை.

*454—திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

திருவட்டார் தொகுதி, மார்த்தாண்டம்—குலசேகரம் சாலையில் இரும்பால் கட்டப்பட்டுள்ள திருவட்டார் பழைய பாலம், களியல் பாலம் இரண்டையும் ஏலத்தில் விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பாலங்களின் அந்த இரும்புப் பொருட்களை ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறினார்கள். இது சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னால் கட்டப்பட்ட பாலங்கள். அதற்குப் பதிலாக ஒரு களியல் பாலம் கட்டி 20 வருடங்கள் ஆகின்றன. திருவட்டாரிலே கட்டி 2 வருடங்கள் ஆகின்றன. களியல் பாலத்திலேயிருந்து 80 சதவீதத்திற்கும் அதிகமான இரும்புகளை திருடர்கள் களவாடி சென்று விட்டார்கள். ஆகவே அதில் இன்னும் நாட்களை கடத்தாமல் உடனடியாக ஏலம் போட்டு அவைகளை அரசாங்கத்திற்கே எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—55.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டார் பாலம் 1990 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு இப்போது போக்குவரத்து அதன் வழியாக நடந்து கொண்டு இருக்கிறது. இப்பாலத்தில் உள்ள இரும்பின் எடை 53 டன். இதனுடைய மதிப்பு 1 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய். அதைப்போல களியல் பாலத்திலே இருக்கக்கூடிய இரும்பின் எடை 40 டன். இதனுடைய மதிப்பு 1 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய். இந்த இரண்டு பாலத்திலே உள்ள இரும்புகளையும் விற்க வேண்டும். அரக்கோணத்திலே இருக்கின்ற தமிழ்நாடு எஃகு நிறுவனத்திலிருந்து இன்றைக்கு விவரங்களை கோட்டப் பொறி

யாளர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக நாம் முதலிலே தமிழ்நாடு ஸ்டீல் லிமிடெட்டிற்குத் தான் விற்கின்றோம். அவர்கள் எடுத்துக்கொள்ளாவிட்டால் தான் நாம் பொது ஏலத்திற்கு கொண்டு வந்து விற்கின்ற நடவடிக்கைகளை எடுக்கிறோம். ஆகவே இதன் அடிப்படையில் மேற்படி பாலங்களை உடைத்து அவற்றில் உள்ள இரும்புகளை எடுக்க நெடுஞ்சாலைத் துறையால் இன்றைக்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நடேசன் : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவட்டாறு பாலம் 50 டன்னுக்கு மேல் இருப்பதாகவும், திற்பரப்பு பாலம் 40 டன் இருப்பதாகவும் கூறினார்கள். நன்றி. திற்பரப்பு பாலத்திலே 40 டன்னில் 20 டன்னை திருடிச் சென்று விட்டார்கள். திருவட்டாறு பாலத்திலே உண்மையிலே 50 டன் இருக்கிறது. அதனுடைய மதிப்பு ஒரு லட்சத்து சொச்சம் அல்ல. பப்ளிக் ஏலத்திலே விட்டால் 4 இலட்சம் ரூபாய்க்கு மேலே போகும். ஆகையினால் அதை நன்கு உணர்ந்து அமைச்சர் அவர்கள் அதை பப்ளிக் ஏலத்திலே விட்டு, நல்ல தொகையிலே ஏலம் போட வேண்டும் என்று கேட்டு, அதையும் இந்த வருடமே செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது நம்முடைய தமிழ்நாடு ஸ்டீல் லிமிடெட்டிலே அங்கே கொடுக்கின்ற அந்த விலைப் பட்டியலைத்தான் சொன்னேன். ஆகவே நம்முடைய தமிழ்நாடு அரசு நிறுவனத்திற்குக் கொடுக்கின்ற விலைப்பட்டியல் வேறு, பொது ஏலத்திலே விடுகின்ற நேரத்திலே பெறப்படுகின்ற விலைப் பட்டியல் வேறு. நாம் பொதுவாக நம்முடைய வேஸ்ட்டான இரும்புகளை எல்லாம் இன்றைக்கு தமிழ்நாடு ஸ்டீல் நிறுவனத்திற்குத் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த விலைப் பட்டியலின்படி தான் இந்த மதிப்பு இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழ்நாடு ஸ்டீல்ஸ் இந்த இரும்பை எடுத்துக்கொள்ளாவிட்டால் நாம் பொது ஏலத்திலே விடுகின்றோம். அப்படி வருகின்றபோது அதிகமான தொகைக்கு ஏலம் போகும் என்ற காரணத்தினாலே அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். என்றைக்குமே அரசுக்கு நஷ்டம் வருகின்ற வகையிலே நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளாது என்பதைத் தெரிவித்து, மிக லாபகரமாகத்தான் எந்தப் பொருளையும் விற்கக்கூடிய சூழ்நிலையில் செயல்படுத்தும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.